**CENTRE FOR THE STUDY OF HUMAN RIGHTS**
UNIVERSITY OF PERADENIYA
PERADENIYA, SRI LANKA

17/06/2019

# அறிவித்தல்

## பட்டதாரி பயிற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம் - தமிழ் மொழி மூலம்

பேராதனைப் பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கை நிலையத்தினால் பட்டதாரி பயிற்சியாளர்களை (Graduate Trainees) இணைத்துக்கொள்வதற்காக, பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் (தமிழ் மொழி மூலம்) கோரப்படுகின்றன.

பட்டதாரி பயிற்சியாளர் திட்டத்தின் நோக்கமானது, மனித உரிமைகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அறிவினைக் கொண்ட நபர்களை உருவாக்குவதாகும். பயிற்சிக் காலத்தில், தெரிவுசெய்யப்பட்ட பயிற்சியாளர் மனித உரிமைகள் கற்கை நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் அவற்றை அமுல்ப்படுத்துதல் போன்றவற்றிற்கு உதவ வேண்டும் என எதிர்பார்கப்படுகிறது. பயிற்சிக் காலப்பகுதியில் மனித உரிமைகள் குறித்த அவர்களின் அறிவு மேம்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

பின்வரும் தகுதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1) கணணியறிவு மற்றும் Multimedia இல் தேர்ச்சி
2) ஏதேனுமொரு இரண்டாம் மொழியில் (ஆங்கிலம்) தேர்ச்சி
3) மனித உரிமைகள் துறையில் பயிற்சி மற்றும் வேலை அனுபவம்
4) சமூக செயற்பாடுகள், பயிற்சிப் பட்டறைகள் (Workshops) மற்றும் பயிற்சி திட்டங்களை ஒழுங்கமைப்பதில் அனுபவம்

**Note** : மனித உரிமைகள் கற்கை நிலையத்தினால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் சான்றிதழ் கற்கைநெறி மற்றும்/அல்லது டிப்ளோமா கற்கைநெறியில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கும் Voluntary Internship Programme இன் கீழ் வேலைசெய்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

கல்வி மற்றும் அனுபவம் தொடர்பான அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு, 23.06.2019 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூயவாறு மனித உரிமைகள் கற்கை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பட்டதாரி பயிற்சியாளர்களுக்கான விண்ணப்பம்"** என எழுதவும்.

பணிப்பாளர்,
மனித உரிமைகள் கற்கை நிலையம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

**SPB 2, Faculty of Arts, University of Peradeniya, Peradeniya. Phone 081-2386481 or 081 -2392634 Fax: 081-2388933 Web: www.cshrperadeniya.edu.lk E-mail: cshrpera@gmail.com**